# திருவிளையாடற் புராணத்தின் பதிப்பு வரலாறு

ச. உமாதேவி

*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித்துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 5*

பண்டைய தமிழ் நூல்களை அச்சில் கொண்டு வருவது என்ற நிகழ்வு தனக்கென ஒரு வரலாற்றினைக் கொண்டதாகும். 1835ல் அச்சு இயந்திரங்கள் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு அதனை யாவரும் பயன்படுத்தலாம் என்ற நிலை வந்த பின்பு தமிழின் பழம்பெரும் நூல்கள் எல்லாம் பதிப்புக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்ப் புலமை கொண்ட பலர் சுவடி களில் இருந்து அச்சுப் பதிப்பிற்குப் பல நூல்களைப் பதிப்புக்குக் கொண்டுவரத் தலைப்பட்டனர்.

பதிப்புத் தளம் விரிவடையத் தொடங்கியது. பிற்காலத்தில் அடையாளப்படுத்தப்படாத பதிப்பாளர்களின் வரிசை பெரும் நீட்சித்தன்மை கொண்டதாக உள்ளது. தமிழ் பதிப்பு வரலாறு என்பது தமிழ் இலக்கிய வரலாற்றினைக் கட்டமைக்கும் ஒரு செயல்பாடாகும்.

பல சுவடிகளை ஒப்பு நோக்கிப் பாட வேறுபாடு தருவது, பதிப்பிக்கப்படும் நூல் சார்ந்த செய்திகளைத் தொகுத்துத் தருவது, அப்பதிப்பைப் பயன்படுத்துவதற்கான பல்வேறு முறைமைகளை நூலின் முற்பகுதியிலும், பிற்பகுதியிலும் உருவாக்கும் மரபு எனப் பதிப்பாசிரியரின் செயல்பாடுகள் பதிப்பு உருவாக்கத்தில் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது.

பழந்தமிழ் நூல்களின் முதல் பதிப்புகள் தொடங்கி அது அடுத்தடுத்த காலகட்டத்தில் எவ்வாறு வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றது என்பதற்கான பின்புலத்தை ஆராய ஆவணங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாகப் பதிப்பாசிரியர்கள் உருவாகி வந்த சமூகப் பின்னணியை அறிய முடிகின்றது.

நவீன யந்திர உலகங்களின் வளர்ச்சிப் போக்கில் பதிப்புகுறித்தான தகவல்கள் முழுதுமாக அறிய முடிகின்றது. தொடக்கக் காலப் பதிப்புகளில் பதிப்புரையோ, முன்னுரையோ எழுதும் மரபு இல்லாத சூழலில் பதிப்பு பற்றியான முகப்பு அட்டையின் உள்ள செய்திகளின் வாயிலாகச் சில செய்திகளை அறியக் கூடியதாக இருக்கிறது. அப்பதிப்புகள் பதிப்பு சார்ந்தசமூகவியல் பின்புலத்தையோ, பதிப்பாசிரியர்கள் பற்றியோ, நூல் தொடர்பான பிற செய்திகளையோ, முற்பதிப்பு வந்திருக்குமாயின் அவை தொடர்பான செய்திகளையோ உள்வாங்கிக்கொள்ள இயலாத நிலை காணப்படுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தாங்கள் பதிப்பிக்கும் நுல்களில் முகவுரை எழுதும் வழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. சாற்றுகவிகள் வாயிலாகப் பாரட்டுகளை மட்டுமே பாடல் வடிவில் வெளிப்படுத்தியுள்ளனர். அதனால் பதிப்பின் வாயிலாக நூல்களை மட்டுமே பெற முடிந்தது. அக்காலத்தைய பதிப்புசார் சமூகப்பின்புலத்தை அறிய இயலாத நிலை காணப்படுகின்றது.

பண்டைய காலத்தில் அச்சிற் பதிப்பிக்கும் வழக்கமின்மையால் தமிழிலுள்ள பெரு நூல்கள் உரைகளோடு பல மறைந்தன, எஞ்சியிருக்கின்ற சில நூல்கள் சிலரிடத்தில் இருப்பதால் அதனைத் தேடி அலைந்து பெறுதலரிது, அப்படிப் பெற்றாலும் எழுதுவன் கிடைப்பதரிது.

தமிழ்ப் பதிப்புலகம் என்பது கிறித்தவப் பாதிரிமார்களின் வருகைக்குப் பின்னரே உருவாகியது. பதினாறாம் நூற்றாண்டிலேயே அச்சு இயந்திரங்கள் வந்தாலும் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து தான் பெரிதும் பயன்பாட்டுக்கு வந்தது. பதிப்புத்தளம் விரிவுபடுத்தப்பட்டது. ஓலைச்சுவடிகளெல்லாம் அச்சில் ஏற்றப்பட்டன. தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு பெரிய மாற்றத்தைக் கண்டது எனலாம். தொடக்ககாலத்தில் பதிப்பு செய்யப்பட்டவை கிறித்தவப் பரவலாக்க முயற்சிலேயே அமைந்தது. பிற்காலத்திலும் அச்சு இயந்திரங்கள் சமய வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியது. புராணங்கள் பதிப்பிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் புராணங்கள் என்று வழங்கப்பெறுபவை பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்று பல புராணங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்பற்றப்புலியூர் நம்பி எழுதிய திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணம் என இரண்டு திருவிளையாடற் புராணங்கள் உள்ளன. காலத்தால் முந்தயது பெரும்பற்றபுலியூர் நம்பி எழுதிய திருவிளையாடற் புராணம். ‘இது வடமொழியிலுள்ள உத்தர மகா புராணத்தின் ஒரு பகுதியான சாரசமுச்சயத்தின் மொழிபெயர்ப்பு. இதனைப் பழைய திருவிளையாடல் அல்லது வேம்பத்தூரார் திருவிளையாடல் என்று அழைப்பர். பல அமைப்பு வரிசையில் இது பரஞ்சோதி முனிவர் நூலிலிருந்து பெரிதும் மாறுபடுகிறது. மொத்தப் பாடல்கள் 1753. பெரும்பற்ற புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணம உ.வே.சா.பதிப்பு (1972) முன்னுரையில் டாக்டர் உ.வே.சா. 64 அதிகமான வேறுபாடுகளைத் தருகிறார் (தமிழ் இலக்கியக் கொள்கை 4, ஏ.என் பெருமாள், திருவிளையாடற் புராணம்,ப.34) காலத்தால் பிந்தையதாகக் கருதப்படும் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் மூலநூலாக வடமொழியில் உள்ள ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியே ‘ஆலாசிய மான்மியம்’ என்பதாகும். அதனையே பரஞ்சோதியார் மொழிபெயர்ப்பு செய்துள்ளார் என்று பதிப்புகள் கூறுகின்றது. பரஞ்சோதி முனிவரால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூல் என்றே பல நூல்களிலும் பதிப்பு செய்யப்படுள்ளது.

திருவிளையாடற் புராணத்தின் காலம் குறித்த கருத்து வேறுபாடு பல உள்ளது. பரஞ்சோதி முனிவர் என்ற பெயராலேயே பலர் இருந்துள்ளனர்.

1951 வித்துவான் தி. பட்டுசாமி ஓதுவார் பதிப்பித்த திருவிளையாடற் புராணத்தின் பதிப்புரையில் ‘பரஞ்சோதி முனிவர், சேதுபுராணம் பாடிய நிரம்ப வழங்கிய தேசிகர் என்பாருடன் கல்வி பயின்றவராக ஒரு வரலாறு கூறுகின்றனர். அதன்படி இவரது காலம் கி.பி.16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

சில ஆராய்ச்சியாளர்கள் அதிவீரராம பாண்டியன் வேண்டுகோளின்படி திருவிளையாடற் புராணத்தை இவர் பாடியதாகக் கூறுகின்றனர். அவ்வாறு கொள்ளின் இவரது காலம் கி.பி.16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். திருமலை நாயக்கரின் அவையிலிருந்த சரசுவதி பண்டாரம் என்பவரின் தலைமையில் ஸ்ரீ சொக்கேசர் முன் திருவிளையாடற் புராணத்தை இவர் அரங்கேற்றியதாகக் கன்னபரம்பரைச் செய்தி ஒன்று கூறுகிறது. அதனை நோக்கின் இவரது காலம் கி.பி.17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

தேவையுலா (இராமேசுவர உலா) பாடிய பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் திருவிளையாடற் புராணத்திற்குச் சாற்றுகவி அளித்ததாக ஒரு செய்யுட்கள் வழங்கி வருகின்றன. அவற்றைக் கொண்டு நோக்கின் பரஞ்சோதி முனிவர் கி.பி.18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதாகும். ஆகவே, பரஞ்சோதி முனிவர்காலம் சுமார் 240 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்பது தெளிவு (பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடற் புராணம் அரும்பதவுரையுடன் 1951 பக் 9-10) என்று காலம் குறித்த கருத்து வேறுபாடுகள் அதிகமாக உள்ளது.

திருவிளையாடற் புராணத்திற்கு உரை எழுதிய ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தம் முன்னுரையில் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி (அ) 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று பதிவு செய்கிறார்.

மு.அருணாசலம் பின்னால் மதுரை சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களைப் புராணமாகப் பாடியவர் ஒரு பரஞ்சோதி முனிவர். இவர் காலம் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம் (தமிழ் இலக்கிய வரலாறு, 16ஆம் நூற்றாண்டு 2பாகம் ப-110) என்று பதிவு செய்கிறார்.

தமிழில் சமய இலக்கிய மரபில் பரஞ்சோதி என்ற பெயர் பலமுறை இடம் பெற்றுள்ளது.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக விளங்கிய சிறு தொண்டர் என்பவரின் பெயர் பரஞ்சோதி என்பதாகும்.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் அகச்சந்தானக் குரவர்களில் ஒருவரானவர். அருள்நந்தி சிவாச்சாரியாருக்கும் உமாபதி சிவாச்சாரியாருக்கும் உபதேசம் செய்தவரும் பரஞ்சோதி என்ற பெயருடையவரே.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் சிதம்பரப் பாட்டியல் இயற்றியவரும் பரஞ்சோதியே 18ஆம் நூற்றாண்டின் திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி என்று மு.அருணாசலம் அவர்கள் தம் இலக்கிய வரலாறு பதினாறாம் நூற்றாண்டு இரண்டாம் பாகத்தில் நான்கு பரஞ்சோதிகளைக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

தமிழ் இலக்கியம் பற்றி எழுதிய ‘கமில்சுலபில்’ என்பவர் பரஞ்சோதி முனிவரின் காலம் கி.பி.1603 என்று ஆண்டைக் குறிப்பிட்டே கூறுகின்றார். (ஜோதி பக்கம் திருவிளையாடற் புராணம் ஆராய்ச்சி முன்னுரை ப.11)

இவ்வாறு திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியர் குறித்தும் அதன் காலம் குறித்தும் பல கருத்து முரண்பாடுகள் உள்ளது. இத்திருவிளையாடற் புராணத்தை இயற்றிய பரஞ்சோதி முனிவர் வேதாரணியப் புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பந்தாதி போன்றவைகளும் இயற்றியுள்ளார்.

மூலம் மட்டுமே பதிப்பிக்கப்பட்ட நூல்களே அதிகமாகக் கிடைத்துள்ளன. அக்காலத்தில் சைவச் சமயத்தை வளப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே பதிப்புகள் வெளிவந்துள்ளன. அதற்குக் காசிமடப் பதிப்பு சிறந்த சான்றாகும். விழாக்காலங்களில் பல பிரதிகளைப் பதிப்பித்து விற்பனை செய்துள்ளனர்.

திருவிளையாடல் புராணம் மூலம் அச்சுப் பதிப்புகள்

பலர் திருவிளையாடற் புராணத்தைப் பதிப்பு செய்துள்ளனர். ஒரே அச்சகத்தாரே பலமுறை திருவிளையாடற் புராணத்தைப் பதிப்பு செய்துள்ளனர்.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பதிப்பு
2. 1882, 1895 - முருகேச முதலியார் பதிப்பு
3. சரவணப்பெருமாளையரவர்களின் பதிப்பு
4. 1862 - அகத்தீஸ்வர முதலியார் பதிப்பு
5. 1867 - முநிசாமி முதலியார் பதிப்பு
6. 1866,1867 - வீராசாமி நாயகர் பதிப்பு
7. 1869 - ஆ.தியாகராஜபிள்ளை பதிப்பு
8. 1885 - பூவை. கலியாணசுந்திர முதலியார் பதிப்பு
9. 1907 - வீ.இராஜு முதலியார் பதிப்பு
10. 1880 - செந்தில் வேலு முதலியார் பதிப்பு
11. 1883 - நாராயணசாமி முதலியார் பதிப்பு
12. 1872 - இராமலிங்க சரணர் பதிப்பு
13. 1896,1907 - சதாசிவப்பிள்ளை பதிப்பு
14. 1913 - நா.கதிரைவேற்பிள்ளை பதிப்பு
15. 1882 - வீரப்பசெட்டியார் பதிப்பு
16. 1906 - சண்முக முதலியார் பதிப்பு
17. சைவசித்தாந்த நூற்பதிப்புக்
18. காசிமடப் பதிப்பு

மூலம் மட்டும் பல பதிப்புகள் வெளிவந்த சூழலில் குறிப்புரைகளையும் சேர்த்துப் பதிப்பிக்கத் தொடங்கினர்.

1. 1906 - இராமலிங்க சுவாமிகளின் குறிப்புரையுடன் சண்முக முதலியார் பதிப்பு
2. 1921 - பு.நா.கதிரைவேற்பிள்ளை பதிப்பு
3. 1894 - ஊ.புஷ்பரத செட்டிப் பதிப்பு
4. 1898 - ம.தி.பாநுகவி பதிப்பு
5. 1923 - பி.நா. சிதம்பரமுதலியார் பதிப்பு
6. 1973 - இராய. சொக்கலிங்கம் பதிப்பு
7. 1917 - சுவாமிநாத பண்டிதர் பதிப்பு

மூலத்துடன் பதிப்பாசிரியர்கள் குறிப்புரைகளைச் சேர்த்தும் பதிப்பிக்கத் தொடங்கினர்.

பிற்காலத்தில் எல்லோரும் படிப்பதற்கு எளிதாக உரையுடன் பதிப்பிக்கத் தொடங்கினர். ஆனால் 1847இல் சபாபதி முதலியாரின் உரையுடன் அண்ணாமலை முதலியார் அவர்களின் சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில் கோவிந்த நாயக்கரால் அச்சடுக்கி பிரசுரித்துள்ளார். இதில் உரைநடைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பாடல்கள் முற்றுப்பெறாமல் இருந்தது. உரைநடையின் தேவையைப் புலப்படுத்துகிறது. உரைநடை வளர்ச்சி பெறாத காலத்தில் வந்த பதிப்பாக இந்நூல் அமைந்துள்ளது. திருவிளையாடற் புராணத்தினை இயற்றிய பரஞ்சோதியின் காலத்தை 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கூறும்போது 1847 வந்த இப்பதிப்பில் ஆசிரியர் குறித்த எந்தத் தகவலும் பதிப்பு செய்யப்படவில்லை. மேலும் ஆய்வுக்குரிய தளத்தை விரிவுபடுத்தவதாகவே இப்பதிப்பு அமைந்துள்ளது.

பிற்காலத்தில் பொழிப்புரைகளும், உரைநடைகளில் அதிகமாக வளர்ச்சிப்பெறத் தொடங்கின. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மூலத்துடன் பொழிப்புரைகளும் வெளிவந்துள்ளன. பதிப்புலகின் நவீன வளர்ச்சியின் முதல்நிலையாக விளக்கப்படங்களுடன் கூடிய பதிப்புகளும் வெளிவந்துள்ளன. வசனநடை நூல்கள், கதைச்சுருக்கம் போன்றவை வெளிவரத்தொடங்கின. இவையெல்லாம் சைவத்தை வளர்த்தெடுக்கும் முயற்சியிலேயே நடைபெற்றன. திருவிளையாடற் புராண உரைசெய்தவர்களில் ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரையும், ஈக்காடு இரத்தின வேலுமுதலியார் உரையும் சிறப்பிடம் பெற்று நிற்கின்றன.

திருப்பனந்தாள் காசிமடம் அதிகமான பதிப்புகளைச் செய்துள்ளது. ரௌத்திரி விஜயதசமி வெளியீடு, காசிமட அதிபர் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் மணிவிழா நினைவாக வெளியீடு, மகாசிவராத்திரி வெளியீடு, பத்தாண்டு ஆட்சிநிறைவு வெளியீடு என்று அதிகமான பிரதிகளைப் பதிப்பு செய்துள்ளனர்.

அதிகமான நூல்கள் வந்தாலும் பாடங்கள் கூறும் நூல் ந.மு.வேங்கடசாமி நாட்டார் போன்ற குறிப்பிட்டுச் சொல்லும்படியான நூல்களே இருக்கின்றன. திருவிளையாடற் புராணத்தில் சிறந்த ஆய்வுப்பதிப்பாக கு.சுந்தரமூர்த்தி பதிப்பித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியீடு 1991. அருஞ்சொற்பொருள் அகராதியுடன் வெளிவந்துள்ளது. இதில் முந்நூல்களில் திருவிளையாடற் புராணக்குறிப்புகள் உள்ள இடங்களும், தெ.பொ.மீயின் ஆராய்ச்சி முன்னுரையும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் காசிமட அதிபர் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் மணிவிழா நினைவாக வெளியிடப்பெற்றுள்ளது.

இவ்வாறு பதிப்புகள் பல வந்துகொண்டிருக்கையில் திருவிளையாடற்புராணம் தொடர்பான கட்டுரைகளும், ஆய்வு நூல்களும் வெளிவந்துள்ளன.

திருவிளையாடல் வசனம் என்னும் தலைப்பில் புலவர் அரசு உரைநடையில் கூறியுள்ளார். சைவச் சித்தாந்தத்தின் வெளியீடாக இந்நூல் 1972இல் வெளிவந்துள்ளது.

புலவர் மணி என்பவர் ‘திருவிளையாடற்புராணம் - தசாவதாரம்’ என்னும் தலைப்பமைந்த நூலில் 1 முதல்170 பக்கங்கள் வரை பரஞ்சோதி திருவிளையாடல் கதைகள் அறுபத்து நான்கும் 171 முதல் 212 பக்கங்கள் வரை திருமாலின் பத்து அவதாரங்களின் கதைகளும் உரைநடையில் கூறப்பட்டுள்ளன. பல பதிப்புகள் வெளிவந்த இந்நூலை மதுரை அருணா பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர்.

திரிசிரபுரத்தைச் சார்ந்த திருநயம் கிருஷ்ணப் பாரதியார் என்பவர் ‘திருவிளையாடல் நாடகம்’ என்னும் பெயரில் திருவிளையாடற் கதைகளை விளக்கிப் படிப்பதற்கான நாடகச் செய்யுள் நூல் ஒன்றினை இயற்றியுள்ளார். இந்நூலாசிரியரின் பவுத்திரர் சாமி அய்யர் புத்திரராகிய முத்துவையரால் இந்நூல் மசூலிப்பட்டணம் டோவ் முத்திராசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

‘பரஞ்சோதியார்கண்ட திருவிளையாடல் என்னும் தலைப்பில் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் அவர்கள் நீங்களும் சுவையுங்கள் என்னும் நூலில் இறைவனின் அழகுணர்ச்சி, பரஞ்சோதியார் திருவிளையாடலின் அமைப்பு, இறைவனின் கருணை ஆகியவற்றைப் பற்றி சுவைபடக் கூறுகின்றார்.

திருவிளையாடற் புராணப் பாநலனும் அணிநலனும், திருவிளையாடல் புராணத்தில் கலைநயம், பரஞ்சோதியாரின் சொல்லாட்சி, இரண்டு திருவிளையாடல் புராணங்கள், திருவிளையாடல் முன்னோடி என்ற தலைப்புகளில் நடைபெற்ற சொற்பொழிவுகள் நூலாக்கம் பெற்றுள்ளன. சித்திரத் திருவிளையாடல் புராணம் என்னும் நூலில் அறுபத்து நான்கு திருவிளையாடலுக்கும் ஓவியத்துடன் கதைச்சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளது

தமிழியல்கோவை என்னும் நூலில் பரஞ்சோதி திருவிளையாடலில் ஐம்புல உணர்ச்சி வெளிப்பாடு, திருவிளையாடலில் திருக்குறள் கருத்துகள், திருவிளையாடலில் பரஞ்சோதியார் உலகிற்குணர்த்தும் நற்செய்திகள் திருவிளையாடல் கூடற்காண்டத்தில் பரஞ்சோதியார் எடுத்தாண்ட பழமொழிகள், பரஞ்சோதி திருவிளையாடலில் நிறங்கள், திருவிளையாடற்ஹுபராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவரின் காலம் போன்ற தலைப்புகளில் கட்டுரைகளைச் சி.பி.கோபால் எழுதி இலட்சுமி பதிப்பகம் 2000 ஆண்டில் வெளியிட்டுள்ளது.

பரஞ்சோதி திருவிளையாடற்ஹுபதைணஙட இலக்கிய மதிப்பீடு என்னும் தன் முனைவர் பட்ட ஆய்வை நூலாக வெளியிட்டுள்ளார் ப.கோபாலன்

பரஞ்சோதி முனிவர் எழுதிய போற்றிக்கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பந்தாதி, திருவாலவாய் தேவாரம் போன்றவை எல்லா நூல்களிலும் முதலிலோ அல்லது நூலின் இறுதியிலோ பதிப்பிக்கப்பட்டுள்ளன.

திருவிளையாடற்புராணத்தின் பதிப்புகள் ஆய்வுப் பதிப்புகளாகவும், கட்டுரைகளாகவும், சொற்பொழிவுகளாகவும் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

## துணைநூல்கள்

[1] அரசு.புலவர், (உரைநடை) திருவிளையாடல் வசனம், கழகப் பதிப்பு, சென்னை பதிப்பு ஆண்டு 1972.
[2] அருணாசலம்,மு. தமிழ் இலக்கியவரலாறு, (16ஆம் நூற்றாண்டு - பாகம்2)காந்தி வித்தியாலயம், தஞ்சை பதிப்பு ஆண்டு 1975.
[3] கோபால்.சி.பி. தமிழியல் கோவை, இலட்சுமி பதிப்பகம், முதற்பதிப்பு 2000.
[4] பரஞ்சோதிமுனிவர், திருவிளையாடற்புராணம், இரத்தினவேலு முதலியார்,ஈக்காடு,(உரை)முருகவேள்புத்தகச்சாலை,சென்னை, 1937.
[5] பெரும்பற்றப்புலியூர் நம்பித் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், சாமிநாதய்யர், டாக்டர்,உ.வே. (பதி)ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை, மூன்றாம் பதிப்பு 1972.